இலங்கையில் செய்தி இதழாகப் பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

விலை 1/50

★ மாதமிரு இதழ் ★ இதழ் 389 ★ 1988 டிசம்பர் 30 வெள்ளிக்கிழமை

## தோழர். கீர்த்தி பாலசூரியவின் நினைவு நீடூழி வாழ்க!



தோழர். கீர்த்தி பாலசூரியவின் மரணத்தின் ஓராண்டு பூர்த்தி நினைவாஞ்சலி தினத்தன்று கனத்தை மயானத்தில் நடைபெற்ற கூட்டத்தின் விபரம் அடுத்த பத்திரிகையில் இடம் பெறும்.

### யூ. என். பி. இராணுவ தாக்குதலையும் ம.வி. முன்னணி பாசிச நடவடிக்கையையும் தோற்கடிக்க

# ஐக்கிய முன்னணி நடைமுறைக்கான அழைப்பு!

பு. க. க. மத்திய குழுவினால் சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ, இ.தொ.கா., ஜ.தொ.கா. கட்சிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம்.

26: 11: 1988

பொதுச் செயலாளர்,

தோழ,

முதலாளித்துவ யூ,என்.பி அரசாங்கம் நவம்பர் 11ம் திகதி அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிரகடனம் செய்துள்ள யுத்தகால சட்டத்தின் கீழான இராணுவ தாக்குதல்களில் இருந்தும் சிங்கள குட்டி முதலாளித்துவ மக்கள் விடுதலை முன்னணி உக்கிரமாக்கியுள்ள எதிர்ப்புரட்சி தாக்குதல்களில் இருந்தும் தொழிலாளர் இயக்கங்களையும், உரிமைகளையும் காக்கும் பொருட்டு தொழிலாள வர்க்க இயக்கத்தின் சுய பலத்தை நடைமுறையில் தொழிற்படுத்தும் ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளை ஏற்பாடு செய்யும் பொருட்டு லங்கா சமசமாஜக் கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ், நவ சமசமாசக் கட்சிகளுடன் கலந்துரையாட வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு எடுத்த தீர்மானத்தின்படி இக் கடிதத்தை தங்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

இனவாத மக்கள் விடுதலை முன்னயிணின் வலதுசாரி ஆத்திரமூட்டல்களை தமக்கு சாதகமாக்கிக் கொண்டுள்ள யூ.என்.பி. அரசாங்கம், தொழிலாள வர்க்க இயக்கங்களை சிதறடித்து இராணுவ, பொலிஸ் சர்வாதிகாரத்தை திணிக்கும் பொருட்டு யுத்த சட்டங்களின் கீழ் இராணுவ நடவடிக்கைகளை தூண்டி விட்டுள்ளது என்பதையும், மக்கள் விடுதலை முன்ன

★ 2ம் பக்கம் பார்க்க

# இனவாத வெறியர்களால் ட்ரொட்ஸ்கிஸ்ட் தோழர். பிட்டவெல கொலை

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நீண்டகால உறுப்பினரும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலூக்கம் மிக்க அங்கத்தவருமான தோழர். ஆர்: ஏ. பிட்டவெல இனவெறி மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப் புரட்சியாளர்களால் 1988 நவம்பர் 12ம் திகதி படுகொலை செய்யப்பட்ட செய்தியை 'தொழிலாளர் பாதை' ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றது.

வெலிமடை உள்ள அவரின் வீட்டினுள் அத்துமீறி நுழைந்த 10 பேர் கொண்ட கொலைகாரக் கும்பல், தோழர். பிட்டவெலவை இரவு 7,50 மணியளவில் வெளியே கூட்டிச் சென்றது. வீட்டில் இருந்து ஒரு மைலுக்கப்பால் கொலைகாரர்கள் அவரை தலையில் சுட்டுக் கொன்று, சடலத்தை மின் கம்பத்தில் தொங்கவிட்டுச் சென்றனர்.

மூன்று குழந்தைகளின் தந்தையான தோழர் பிட்டவெல பதுளை பிராந்தியத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் குட்டி முதலாளித்துவ தீவிர வலதுசாரி இனவாத பிரச்சாரத்துக்கும் யூ. என். பி. அரசாங்கத்தினதும் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும் இராணுவ–பொலிஸ் சர்வாதிகார திட்டங்களையும் எதிர்த்து தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இயக்கத்தில் உறுதியாகப் போராடி வந்தவர்.

1970பதுகளில் இலங்கை ஆசிரியர் சங்கத்தில் குட்டி முதலாளித்துவ தலைமைக்கு எதிராக தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தினை அச் சங்கத்தினுள் முன்னெடுத்தவர்களுள் தோழர் பிட்டவெல குறிப்பிடத்தக்கவர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சுயநிர்ணய உரிமை பிரேரணை முதலல் இலங்கை ஆசிரியர் சங்கத்தி

★ 7ம் பக்கம் பார்க்க



ஜே.வி.பி. எதிர்ப்புரட்சியாளர்களால் கொலை செய்யப்பட்ட தோழர் ஆர். ஏ. பிட்டவெல பு.க.க. பொதுச் செயலாளராக விளங்கி மரணமான தோழர். கீர்த்தி பாலசூரியவின் இறுதி ஊர்வலத்தில் (இடதுபுறம் முன்னணியில் செல்பவர்)

## வடக்கு கிழக்கிலிருந்து இந்திய — இலங்கை இராணுவத்தை அகற்று

# ஐக்கிய முன்னணி நடைமுறைக்கான . . .

முன் பக்கத் தொடர்ச்சி

ணியின் எதிர்ப்புரட்சி தலைவர்கள் தொழிலாளவர்க்க இயக்கத்துக்கு எதிரான பயங்கரவாதத்தின் மூலம் யூ.என்.பி.-சிறீலங்கா முதலாளிகளின் திட்டங்களுக்கான நிலைமையை சிருஷ்டிப்பதோடு தமது சொந்த தலையீட்டின் மூலம் பாசிச பாணியிலான சர்வாதிகாரத்தை உருவாக்க முயல்கின்றார்கள் என்பதையும் தாங்கள் ஒற்றுக் கொள்ளுவீர்கள் என நினைக்கின்றோம். ஏகாதிபத்தியவாதிகளின் நலன்களுக்குப் பொருத்தமான முறையில் முதலாளி வர்க்கத்தினதும், குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினதும் இந்தப் பிற்போக்கு நடவடிக்கைகள் தொடுக்கப்பட்டுள்ளன மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்புரட்சி ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளை பயன்படுத்தி யூ.என்.பி அரசாங்கம் பிரகடனம் செய்துள்ள யுத்த சட்டம் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் கீழ் எந்தவொரு வேலைத்தலத்திலும் சரி தொழிலாளர்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் காக்கும் பொருட்டு எந்தவொரு வர்க்க நடவடிக்கைக்கும் அழைப்பு விடுப்பது, அணி திரட்டுவது அவற்றில் சம்பந்தப்படுவது மரணதண்டனைக்குரிய குற்றமாகும். தொழிலாள வர்க்கத்தை மேற்சொன்ன விதத்தில் அணிதிரட்டும் பொருட்டு எந்தவொரு பிரசுரத்தையும் பிரசுரிப்பதும் வெளிப்படுத்துவதும் மரணதண்டனைக்கு ஆளாகக் கூடிய தவறாகும். தணிக்கைக்கு பதிலாக மரணதண்டனை. தொழிலாள வர்க்கத்தின் கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் மேற்குறிப்பிட்ட 'தவறுகளுக்' சேர்த்து அவற்றை ஒழுங்கு செய்பவர்களையும், அவற்றில் பங்கு கொள்பவர்களையும் மரணதண்டனைக்கு ஆளாக்க முடியும்.

மேற்சொன்ன 'தவறை' செய்யும் ஆட்களுக்கு திடீர் எழுந்த விசாரணைகள் மூலம் தண்டனை வழங்கும் பொருட்டு அரசாங்கம் இராணுவ நீதிமன்ற வகையறுவைச சேர்ந்த 'உயர் நீதிமன்றங்களை' திறுவியுள்ளது. இந்தச் சட்ட விதிகளுடன் தொழிற்பட்டுவரும் இராணுவம், மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்புரட்சியாளர்களின் 'ஆளுமை' இருங்குள்ள தென் மாகாணத்தின் அநேக மாவட்டங்களில் மட்டுமன்றி ஏனைய மாகாணங்களைச் சேர்ந்த தொழிலாளர்களையும், நிர்வாக ஊழியர்களையும் துப்பாக்கி முனையில் வேலை வாங்கி வருவதையும் நீங்கள் அறிவீர்கள். மக்கள் விடுதலை முன்னணியின் கொலைகார படைகளின் கொலை மிரட்டலினால் வேலைக்கு செல்லாத தொழிலாளர்கள் யூ.என்.பி. அரசாங்கத்தின் மரண மிரட்டல்களின் கீழ் வேலைக்குச் செல்ல நேரிட்டுள்ளது.

மாளிகாவத்தை புகையிரத வேலைத்தளத்தில் இது செயற்படுத்தப்பட்ட விதம் இந்த இராணுவ மிரட்டலின் நிச சுயரூபத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. இராணுவத்தால் முற்றுகையிடப்பட்ட தருணத்தில் புகையிரத சாரதிகள் தாம் மக்கள் விடுதலை முன்னணியின் படுகொலை மிரட்டலினால் வேலைக்குச் செல்ல முடியாத நிலையில் இருப்பதாக முறையிட்டனர். அதற்கு இராணுவத்தினர் புகைபிரத சாரதிகள் இராணுவத்தின் மரண தண்டனைக்கு ஆளாக வேண்டுமா இல்லையா என்பதை அவர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டனர்; இச் சாரதிகள் இன்று இருபுறத்தில் இருந்து தொடுக்கப்பட்டுள்ள படுகொலை மிரட்டல்களின் கீழ் இராணுவ கைது செய்தலுக்குட்பட்டு சேவை புரிந்து வருகின்றனர் புகையிரத வேலைத்தளத்தின் தொழிலாளர்கள் இந்த யுத்தச் சட்டத்தின் கீழ் சேவைக்கு அழைக்கப்பட்டு, சிலர் கைது செய்தலுக்குள்ளாகி வர ஏனையோர் இராணுவ அட்டூழியங்களின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தொழிலாள வர்க்கம் முகம் கொடுக்க நேரிட்டுள்ள இந்நிலைமையை தாங்கள் நன்கு அறிவீர்கள். ஆதலால் இங்கு மேற்கொண் உதாரணம் தருவது அவசியம் இல்லை.

தொலைக்காட்சி, ஒலி பரப்பு கூட்டுத்தாபனம் உள்ளடங்கலான அரச வெகு ஜனத் தொடர்பு சாதனங்களும் இன்று இராணுவமயமாக்கலுக்கு ஆட்பட்டுள்ளன.

சிங்கள குட்டி முதலாளித்துவ இனவாத மக்கள் விடுதலை முன்னணி கடந்த பல வாரங்களாக தொழிலாளர் வதிவிடங்களிலும், வேலைத்தலங்களிலும் பாய்ந்து விழுந்து ஆரம்பித்த பிற்போக்கு ஆத்திரமூட்டல் இயக்கத்தை முழுமனே தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு இந்த இராணுவ தாக்குதலை யூ.என்.பி அரசாங்கம் தொடுத்து வருகின்றது. ம வி. முன்னணியின் பிற்போக்கு தலைவர்கள் 'தற்காலிக தேசபக்த இராணுவ ஆட்சி'' என்ற பேரில் இராணுவத்தையும் அடிப்படையாகக் கொண்ட இனவாத அதிதீவிர வலதுசாரி அரசாங்கத்தை இலக்காகக் கொண்ட வலைத் திட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டு வருகின்றனர்.

சிங்கள இனவாதம், தமிழ் விடுதலை போராட்டம் சம்பந்தமான படு குரோதம், இந்திய எதிர்ப்பு, தோட்டத் தொழிலாளர் எதிர்ப்பு என்பனவற்றின் அடிப்படையில் சிங்கள குட்டி முதலாளித்துவத்தை தூண்டி தொழிலாள வர்க்கத்துக்கு எதிராகத் திருப்ப முயலும் மக்கள் விடுதலை முன்னணி பாசிச இலட்சணங்கள் கொண்ட ஓர் இயக்கமாகும். இவை தொடர்பாக மக்கள் விடுதலை முன்னணி தலைவர்களும் யூ.என்.பி. — சி.ல.சு.க. பேரினவாதக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளிலும், பேரம் பேசல்களிலும் ஈடுபட்டுள்ளமை இரகசியம் அல்ல.

தமது இனவாத சுலோகங்களை முன்வைத்து கடந்த நவம்பர் 7ம் திகதி 'முழு பொதுவேலை நிறுத்தம்' என்ற பேரில் தொழிலாளர்களை பலாத்காரமாக வேலைக்கு செல்லவிடாது தடுக்கும் வேலைத்திட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி தலைவர்கள் நடைமுறைப்படுத்தினர். இந்த இனவாத பிற்போக்கு தலைமைகள் களத்தில் இறக்கியுள்ள 'படுகொலை படை' யினால் கடந்த சில தினங்களில் இலங்கை பூராவும் கொலை செய்யப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை 1948ல் இருந்து ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் தமது ஆட்சிக்காலத்தின் கொலை செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கையை தாண்டியுள்ளது.

இந்தப் பிற்போக்கு குட்டி முதலாளித்துவ தலைவர்கள் வேலைத்தலங்களில் தொழிலாளர்கள் போராட்டங்களில் எண்ணற்ற தியாகங்கள் மூலம் கட்டி எழுப்பிய தொழிற் சங்கங்களை கலைக்கும்படியும் தமது ஜுன்டா குழுக்களின் ஆணையின் கீழ் செயற்படும்படியும் இல்லையேல் மரணத்துக்கு பலியாக நேரிடும் எனவும் ஆணையிட்டுள்ளனர். இது இவர்களினால் எதிர்பார்க்கப்படும் தொழிலாளர் விரோத சர்வாதிகார ஆட்சி முறையை சுட்டிக் காட்டுகின்றது. இப் பிற்போக்கு தலைவர்கள் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவின் ''ஐந்தாம் படை'' என பெயர் சூட்டி, மிரட்டி உள்ளனர்.

சில பிராந்தியங்களில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியையும், சமசமாஜக் கட்சியையும் 'தடை' செய்து அவற்றின் அங்கத்தினர்களை இராஜினாமாச் செய்யும்படி நெருக்கியுள்ளனர். தொழிலாள வர்க்க இயக்கங்களான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜ கட்சி, நவ சமசமாஜ கட்சி, புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தின் தலைவர்கள், அங்கத்தினர்கள் தொழிற் சங்க தலைவர்கள் விவசாயிகள் இயக்கம் உள்ளடங்கலான ஒடுக்கப்படும் மக்கள் அமைப்புகளின் தலைவர்களையும் அங்கத்தினர்களையும் இப் பிற்போக்கு கும்பல் கொலை செய்துள்ளது. 'அத்த' பத்திரிகை வாசகர்கள் கைக்கு கிட்டா வண்ணம் இப் பிற்போக்காளர்களால் பலாத்காரமாக தடுக்கப்பட்டுள்ளது. தொழிலாள வர்க்க அமைப்புக்களின் கூட்டங்களின்மேல் கொலைகாரத் தாக்குதல் தொடுக்கும் இவர்களின் நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் அணி திரட்டப்படாத பாட்டாளி, அரைப் பாட்டாளி மக்கள் பகுதியினரையும் ஏழை விவசாயிகளையும் மக்கள் விடுதலை முன்னணி தலைவர்கள் தமது ஆத்திரமூட்டும் ஊர்வலங்கள், கூட்டங்கள் மற்றும் வேலைகளில் ஈடுபடுத்துவது முக்கியமாக துப்பாக்கி முனையில் நடாத்தும் பயங்கரத்தின் மூலமாகவே.

மக்கள் விடுதலை பிற்போக்காளர்களின் வேலைத் திட்டத்தின் இலக்கு தொழிலாள வர்க்க அமைப்புக்களை சிதறடிப்பதும், தமிழ் தேசிய இனத்தை இரத்தத்தில் மூழ்கடிப்பதும், கிராமிய ஏழை விவசாயிகளை பயங்கரத்துக்கு உள்ளாக்கி ஆட்சி செய்யும் சர்வாதிகாரத்தை உருவாக்குவதே. இது நன்கு தெளிவாகி உள்ளது; யூ என் பி. அரசாங்கத்துடனும் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியுடனுமான இப் பிற்போக்கு தலைவர்களின் மோதுதல், அத்தகைய சர்வாதிகார ஆட்சியை உருவாக்க உதவி செய்வதன் மூலம் தமது பங்கினைப் பெற்றுக் கொள்ளும் வகையிலான பேரம் பேசலின். ஒரு பாகமாகும். இதற்கு மூற்றிலும் முரணான முறையில் இவர்கள் தொழிலாள வர்க்க அமைப்புக்கள் மீது தொடுத்துள்ள தாக்குதலானது அவற்றினை சிதறடித்து எதிர்ப்புரட்சியினை நடைமுறைப்படுத்தும் வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாகும்.

பிரமாண்டமான முறையில் உக்கிரம் கண்டுள்ள நெருக்கடியில் மூழ்கிப்போயுள்ள ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் உலகம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கத்தையும், ஏழை விவசாயிகளையும் அவற்றின் அமைப்புக்களை சிதறடித்து சுரண்டல் வெறிக்கு இந்திய துணைக் கண்டம் பூராவும் உள்ள தொழிலாளர்கள், ஏழைகளை ஆட்படுத்த தொழிற்பட்டு வரும் தேசிய பிற்போக்கு ஏஜன்டுகளாக இலங்கையின் யூ.என்.பி, அரசாங்கமும், சி.ல.சு.க., சி.ல.ம.க., மக்கள் விடுதலை முன்னணி குட்டி முதலாளித்துவ இயக்கமும் தொழிற்படுவதாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டுகின்றது.

தமிழ் விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் பொருட்டு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் வழி நடாத்தலின் கீழ் இந்திய-இலங்கை உடன்படிக்கை கைச்சாத்தானமையும், வட-கீழ் மாகாணங்களில் இராணுவத்தை இறக்கி அதைப் பலப்படுத்தியதன் மூலம் யூ.என்.பி. அரசாங்கம் கட்டவிழ்த்துள்ள தாக்குதலும் மக்கள் விடுதலை முன்னணியின் பிற்போக்கு இயக்கமும் ஒன்றுக்கு ஒன்று கூட்டாக இராணுவ பொலிஸ் சர்வாதிகாரத்தை அபிவிருத்தி செய்வதாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கருதுகின்றது.

யூ.என்.பி.—சிறிலங்கா முதலாளிகளுடன் இணைந்து கொள்ள முடியாது போனால் தனியாக தொழிலாள வர்க்க அமைப்புக்களை சிதறடித்து, அதனடிப்படையில் சர்வாதிகார ஆட்சியை திணிக்க மக்கள் விடுதலை முன்னணி பிற்போக்காளர்களின் இயக்கம் தயாராகி வருகின்றது என்பது தெளிவு.

யூ. என். பி. இராணுவ—பொலிஸ் சர்வாதிகார திட்டங்களை உக்கிரமாக்கியதும், மக்கள் விடுதலை முன்னணி தனது ஆத்திரமூட்டும் இயக்கத்தை உக்கிரமாக்கியதும் யூ.என்.பி. அரசாங்கத்தின் அரசியல் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் அடிப்படை ஜனநாயக உரிமைகளையும் வாழ்க்கை உரிமைகளையும் கட்டிக்காக்க தொழிலாள வர்க்கப் பகுதியினர் தமது தொழிற்சங்கங்களுடாக போராட்டத்துக்கு கிளர்ந்த தருணத்திலேயேயாகும். அவ்வாறே உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளையின் பேரில் அரச நிறுவனங்களில் 103ஐ தனியார் மயமாக்கவோ அல்லது மூடிவிடவும் நூற்றுக்கு 25%ஆல் அரசாங்க ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்கவும், ரூபாவின் மதிப்பை குறைக்கவும், சம்பளத்தை உறைய வைக்கவும், இலங்கையின் முதலாளி வர்க்கம் நடவடிக்கை எடுக்கையில் அதனை எதிர்த்து கிளரும் தொழிலாள வர்க்கத்தின், பரந்தளவிலான கிளர்ச்சிக்கு முகம் கொடுக்க நேரிடுமாதலால் முன்கூட்டியே இராணுவ சர்வாதிகார தயாரிப்புக்கள் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

இந்நிலைமையானது தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான பலத்தை அணி திரட்ட வேண்டியதன் அவசியத்தை மேலும் சுட்டிக் காட்டுகின்றது.

இம் முழு நிலைமைக்கும் முகம் கொடுக்கும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தனது அரசியல் மூலோபாயத்தின் அடிப்படையில் போராடும் அதே வேளையில் உருவாகியுள்ள தீர்க்கமான அரசியல் சந்தியில் தொழிலாள வர்க்கத்தின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை காக்கும் பொருட்டு வர்க்க சக்தியை அணி திரட்டும் ஐக்கிய முன்னணி நடவடிக்கைக்கு தங்களை அழைக்க தீர்மானித்துள்ளது,

★ 7ம் பக்கம் பார்க்க

### கொர்பச்சேவும் ஸ்டாலினிசத்தின் நெருக்கடியும்

# சோவியத் யூனியனில் நிகழ்வதென்ன?

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை

## மார்ச் 23, 1987

**— கடந்த இதழின் தொடர்ச்சி —**

வலிமையற்றுவரும் அதிகாரத்துவ சாதியை எதிராக தொழிலாள வர்க்கத்திடமிருந்து வளர்ந்துவரும் எதிர்ப்புக்கு முகங்கொடுக்க, கொர்பச்சேவ் அதிகாரத்துவத்தை முழுமையாக காக்கும் நிலைப்பாட்டிலிருந்து சோவியத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக மோசமான பலாபலன்களுக்காக நடவடிக்கை எடுத்தார்.

எல்லாவகையான ஸ்டாலினிஸ்டுகளும், மத்தியதர வர்க்க தீவிரவாதிகள், அகிம்சாவாதிகள், திரிபுவாதிகள், சீர்திருத்தவாதிகள் போன்ற சகலரும் தமது முன்னோர் ஸ்டாலினை புகழ்ந்து துதிபாடியதுபோல் இன்று ''ஜனநாயக'' கொர்பச்சேவ் என புகழ்ந்து பாடுகின்றவேளையில், இதற்கு எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அதிகாரத்துவத்தின் அசைக்க முடியாத எதிரியொன்றாக விளங்கி வருகின்றது.

அதிகாரத்துவத்தின் நெருக்கடியினால் ஏற்படுத்தப்பட்ட சகல சந்தர்ப்பங்களையும் தொழிலாளர்களுக்கு வழங்க நிர்ப்பந்திக்கப்பட்ட சலுகைகள் உட்பட பிரயோகித்தவாறு அரசியல் புரட்சிக்கான சமரசமற்ற போராட்டத்தை நடத்துமாறு சோவியத், சர்வதேச தொழிலாள வர்க்கத்திற்கு அழைப்பு விடுகின்றோம். அதிகாரத்துவ ஆட்சியை தூக்கி வீசி சோவியத் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளவர்க்க ஆட்சி அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்காக.

(13) சோவியத் யூனியனில் உள்ள தொழிலாள வர்க்கம், அனைத்துலக தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் என்ற இரு பகுதியினருக்கும் கொர்பச்சேவின் சீர்திருத்த கொள்கை எனப்படுபவை ஒரு கேவலம் அச்சுறுத்தலாக விளங்குகின்றது: இது அக்டோபர் புரட்சியின் வரலாற்றுத் தேட்டங்களை ஆபத்துக்குள்ளாக்குவதோடு உலகளாவிய ரீதியில் ஏகாதிபத்தியத்துடனான அதிகாரத்துவத்தின் எதிர்ப்புரட்சிக் கூட்டுக்களால் பிணைக்கப்பட்டும் உள்ளது.

சோவியத் யூனியனின் உள்ளே புரட்சியில் இருந்து 70 ஆண்டுகளாக ஒட்டுண்ணி அதிகாரத்துவத்துக்கிடையேயும் உற்பத்திச் சாதனங்களின் தேசியமயமாக்கம், பொருளாதார திட்டமிடல் மூலம் உற்பத்திச் சக்திகளின் பெருக்கம் சாத்தியமான போதிலும் அது சமத்துவமின்மை, சலுகைகள், அதிகாரத்துவம் ஆகிய வற்றை குறைத்துவிடவில்லை.

'தனி ஒரு நாட்டில் சோசலிசத்தை' நிர்மாணிப்பது சாத்தியம் என்ற அதிகாரத்துவத்தின் வாதங்களுக்கு இடையேயும் ஊழியத்தின் பயன்பாட்டுத்திறன் இன்னமும் நன்கு முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் மட்டத்துக்கு கீழேயே நிற்கின்றது. இந்த மட்டத்தினை தாண்டுவதன் மூலம் மட்டுமே சோசலிசம் உத்தரவாதம் செய்யப்பட முடியும். இந்த உயர் நிலை இல்லாமல் சோவியத் தொழிலாளர் அரசினை தூக்கி வீசும் ஆபத்து ஏகாதிபத்திய இராணுவங்களின் தலையீட்டால் மட்டுமன்றி மலிவான முதலாளித்துவ பண்டங்களின் ஆக்கிரமிப்பினாலும் அச்சுறுத்தப்பட்டு வருகின்றது.

ஊழியத்தின் இந்த உயர் பயன்பாட்டுத் திறன் ட்ரொட்ஸ்கி சுட்டிக்காட்டியது போன்று, ''முதலாளித்துவத்தின் முன்னைய முழு அபிவிருத்தியினாலும் உருவாக்கப்பட்ட உலகளாவிய உழைப்பு பகிர்வு மண்ணில்'' மட்டுமே அடையப்பட முடியும். அதாவது, முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் ஊடாகவே அடைய முடியும்.

(14) இவ்வாண்டு ஜனவரி மாத மத்திய குழு தொடர் கூட்டத்தில் கொர்பச்சேவ் நிகழ்த்திய பேச்சு, 1970பதுகளின் நடுப்பகுதியில் இருந்து உக்கிரமடைந்த கடும் பொருளாதார நெருக்கடியினுள் சோவியத் பொருளாதாரம் அகப்பட்டுக் கொண்டுள்ளதை தெளிவு படுத்தியது.

''கடந்த மூன்று ஐந்தாண்டு திட்டக் காலப்பகுதியில் தேசிய வருமான வளர்ச்சி விகிதங்கள் அரைவாசிக்கும் மேலாக வீழ்ச்சி கண்டன. 1970பதுகளில் ஆரம்ப காலங்களில் இருந்து அநேக திட்ட எல்லைகள் அடையப்படவில்லை. பொருளாதாரம் முழுமையாக கட்டுக்கடங்காததாகவும், கண்டுபிடிப்புக்களை பிரதிபலிக்காதனவாகவும் மாறியது: வெளியீட்டின் கணிசமான பகுதியின் தரம் நடைமுறைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாததோடு உற்பத்தியில் ஏற்றத் தாழ்வுகள் அதிகரித்தது.''

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியானது பொருளாதாரத்தை உலகச் சந்தையில் தங்கியிருக்கச் செய்தது: சோவியத்தில் 1970ல் 11.5 மில்லியன் ரூபிள்களாக இருந்த ஏற்றுமதிகள் 1984ல் 74 பில்லியன் ரூபிள்களாக அதிகரித்தது. இதேசமயம் இறக்குமதி 10.5 பில்லியன் ரூபிள்களில் இருந்து 65 பில்லியன் ரூபிள்களாக அதிகரித்தது

சோவியத் வெளிநாட்டு வர்த்தகத்தின் அதிகரிப்பு உலக முதலாளித்துவ நெருக்கடியின் தாக்கத்துக்கு அதிகரித்த விதத்தில் அம்பலமாகியதை குறித்தது. 1983ல் மேற்கத்தைய நாணயங்களில் கிடைத்த வருமானத்தில் 80% எரிபொருள் ஏற்றுமதி (எண்ணெயும் வாயுவும்) மூலம் கிடைத்தது. எண்ணெய் விலைகளின் வீழ்ச்சி பாரதூரமான தாக்கங்களை ஏற்படுத்தியது. ஒரு பீப்பா எண்ணெயின் விலை ஒரு டாலரால் வீழ்ச்சி கண்ட ஒவ்வொரு தடவையும் இது சோவியத் யூனியனின் வெளிநாட்டு வருமானத்தில் 50 இலட்சம் டாலர்களை வீழ்ச்சி காணச் செய்தது. 1984ல் 4 பில்லியன் டாலர்களாக இருந்த வர்த்தக உபரி, 1985ல் 6 மில்லியன் பற்றுக் குறையாக மாற்றப்பட்டது.

நீடித்துவரும் சோவியத் பொருளாதாரத்தின் பின் தங்கிய நிலைமையானது பெரிதும் அவசியமான உயர் தொழில் நுட்ப இறக்குமதிகளைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டப்படும் வெளிநாட்டுச் செலாவணியைப் பெற்றுக் கொள்ள எண்ணெய் போன்ற மூலப் பொருட்களின் ஏற்றுமதியில் தங்கியிருக்கும் வண்ணம் நெருக்கப்பட்டுள்ள உண்மையின் மூலம் வெளிப்பாடாகி உள்ளது.

சோவியத் யூனியனில் சோசலிசத்தின் அபிவிருத்தியும் அதன் வளர்ச்சிப் போக்கில் தோன்றும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வும் பாட்டாளி வர்க்கப் புரட்சியை உலக அரங்குக்கு விஸ்தரிப்பதுடன் பிரிக்கமுடியாத விதத்தில் இணைந்துள்ளது. உலகச் சந்தையுடனான தொடர்புகள் மூலம் மட்டுமே தொழில் நுட்பத்தின் பற்றுக் குறையும் கைத்தொழிலுக்கும் விவசாயத்துக்கும் இடையேயான முரண்பாடுகளும் தீர்க்கப்பட முடியும். அந்தச் சந்தையினுள் சோவியத் யூனியனை இணைப்பதற்கு இரண்டு வழிகள் மட்டுமே உள்ளன: கொர்பச்சேவின் முதலாளித்துவ புனருத்தாரணத்தினை நோக்கிய பாதையும், உலக சோசலிசப் புரட்சிப் பாதையுமே அவை.

(15) மேற்கத்தைய முதலாளித்துவத்தின் நெருக்கடியால் சோவியத் பொருளாதாரம் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வரும் நிலைமையில் கொர்பச்சேவின் சீர்திருத்தங்கள் திட்டமிடப்பட்ட பொருளாதாரத்தின் அத்திவாரங்களை பாதிக்கின்றது: 20 அமைச்சுக்களும் 70 அரச நிறுவனங்களும் முதலாளித்துவ நாடுகளுடனும் கம்பனிகளுடனும் தமது சொந்த வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளவும் 40% வெளிநாட்டு நாணயத்தை அவை வைத்துக்கொள்ளவும் அனுமதிப்பதன் மூலமும் கொர்பச்சேவ், நெப்மென்களுக்கும் உலகச் சந்தைக்கும் இடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தும் ஸ்டாலினின் முயற்சியை லெனினும் ட்ரொட்ஸ்கியும் தோற்கடித்ததன் பின்னர் முதற் தடவையாக வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகத்திற்குக் குழி பறிக்கின்றார். அதே சமயத்தில் அவர் மூலதனத் திரட்சிப் போக்கினையும் ஆரம்பிக்கின்றார் இது தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளைப் பாரதூரமாகப் பாதிக்கும்.

கொர்பச்சேவ், நிதி, கைத்தொழில் மூலதனத்தின் பிரதிநிதிகளிடம் இருந்தும் உலகம் பூராவும் உள்ள ஏகாதிபத்திய அரசாங்கங்களிடம் இருந்தும் வெறறிகரமான பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்டதற்குக் காரணம் இதுவே. (வெளி

4ம் பக்கம் பார்க்க

# சோவியத் யூனியனில் நிகழ்

ஞல் அவரது ஏகாதிபத்தியம் பற்றிய அடிப்படை ஆய்வுகளில் சுட்டிக்காட்டப்பட்ட ஓர் அமைப்பான) 'டியூச் பாங்கின் அதிபர் சமீபத்திய மாஸ்கோ 'சமாதான ஆய்வுகளில்' பங்கு கொண்டதன் மூலம் இது உணர்த்தப்பட்டது.

மாஸ்கோவில் இருந்து திரும்பிய 'டியூச் பாங்கின்' அதிபர் கிறிஸ்ரியன்ஸ் ஒரு பேட்டியில் ''ஜேர்மனும் சோவியத் யூனியனும் எதிர்காலத்தின் சந்தைகள்'' எனக் குறிப்பிட்டார்; ''மற்றவற்றைக் காட்டிலும் சோவியத் யூனியனைப் பொறுத்த மட்டில் இது பெரிதும் உண்மை, ஏனெனில் ஒரு நீண்ட ஒத்துழைப்புக் காரணமாக உறவுகள் பெரிதும் ஆழமாகியுள்ளன'' என்ருர்.

ஜேர்மன் முதலாளி வர்க்கம் இரண்டாம் உலக யுத்தத்தில் இராணுவ ரீதியில் சோவியத் யூனியனை ஆக்கிரமிப்பதில் தோல்வி கண்டதன் பின்னர் அது 'சமாதான' வழிகள் மூலம் அதன் சந்தையை ஆக்கிரமித்துக் கொள்ள ஆர்வம் கொண்டுள்ளது. ஆனல் லெனின் குறிப்பிட்டவாறு: 'யுத்தம் வேறு கருவிகளால் அரசியலை தொடர்வதாகும்''; வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகத்தினை கொர்பச்சேவ் பலவீனமடையச் செய்வது, ஏகாதிபத்தியத்தின் பசியை மட்டுமே தூண்டும்; அவர்களின் இறுதி இலக்கு சோவியத் யூனியனை மீளவும் கைப்பற்றுவதே.


கொர்பச்சேவின் கொள்கைகள் வெளிநாட்டு மூலதனத்தின் ஊடுருவலுக்கு சோவியத் யூனியனை திறந்து விட்டுள்ளது. ஏறக்குறைய 100 கூட்டுக் கம்பனிகள் சம்பந்தமாக வெளிநாட்டு நிறுவனங்களுடன் பேரம் பேசல்கள் ஏற்கனவே ஆரம்பித்து விட்டன. அத்தகைய 10 திட்டங்கள் தொடர்பாக ஏற்கனவே உடன்பாடுகள் காணப்பட்டுள்ளன. மேலும் இரண்டு பற்றி விவரிக்கப்பட்டுள்ளதோடு அவை அரசாங்க அங்கீகாரத்துக்காக மட்டுமே காத்திருக்கின்றன.

வெளிநாட்டு முதலாளிகளுடன் நேரடி ஒத்துழைப்புக்கான இத் திருப்பத்துக்காக சோவியத் அதிகாரத்துவத்தின் உயர் தட்டினர் கொண்டுள்ள பேரார்வம், கொர்பச்சேவின் மனைவி ரெயிஜா, ஜேர்மன் நவநாகரிக சஞ்சிகையான 'பேர்டா மொடனி'ன் ஒரு ரஷ்ய மொழி பெயர்ப்பு பதிப்பினை ஆரம்பிக்கும் திட்டத்தின் மூலம் வெளிப்பட்டுள்ளது.

(16) இந்த அபிவிருத்திகளையும் அவை உருவாக்கும் ஆபத்துக்களையும் சோவியத் பொருளாதாரத்தின் அடிப்படை முரண்பாடுகளின் நிலைப்பாட்டில் இருந்து மட்டுமே புரிந்து கொள்ள முடியும். இவற்றினிடையே முக்கியமானது தேசியமயமாக்கப்பட்ட சொத்து உறவுகளுக்கும் கூலி உழைப்பின் அடிப்படையில் முதலாளித்துவ வடிவிலான பங்கீடுகளுக்கும் முதலாளித்துவ உற்பத்தி வடிவின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட பங்கீட்டு வடிவங்கள் இடையேயான மோதுதலாகும்.

50 ஆண்டுகளின் முன்னர் ட்ரொட்ஸ்கி 'புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்டது' என்ற நூலில் இம் முரண்பாட்டின் மூலோபாய தாக்கங்களை சுட்டிக் காட்டினர், ''சோவியத் ஆட்சியின் ஆழத்தில் இருந்து இரண்டு எதிரான போக்குக்கள் வளர்ச்சி காண்கின்றன. சீரழிந்து போகும் ஒரு முதலாளித்துவத்துக்கு முரண்பட்டவிதத்தில் எவ்வளவு தூரத்துக்கு அது உற்பத்திச் சக்திகளை அபிவிருத்தி செய்கின்றதோ அவ்வளவுக்கு அது சோசலிசத்துக்கான பொருளாதார அடிப்படையைத் தயார் செய்கின்றது. ஒரு மேல் தட்டினரின் நலனுக்காக அது எவ்வளவுக்கு முதலாளித்துவ தரங்களிலான பங்கீட்டினை மேலும் மேலும் தீவிரமாக வெளிப்படுத்திக் கொண்டிருப்பின் அது ஒரு முதலாளித்துவ புனருத்தாரணத்துக்கு தயார் செய்கின்றது. சொத்து வடிவங்களுக்கும் பங்கீட்டு தரங்களுக்கும் இடையேயான இந்த முரண்பாடு திட்டவட்டமின்றி வளர்ச்சி பெற முடியாது. முதலாளித்துவதரம் ஏதோ ஒரு வடிவில் ஒன்றில் உற்பத்திச் சாதனங்களுக்கும் பரவ வேண்டும் அல்லது பங்கீட்டுத் தரங்கள் சோசலிச சொத்து முறையுடன் தொடர்புபட்ட விதத்தில் கொணரப்பட்டாக வேண்டும்'' (ட்ரொட்ஸ்கி புரட்சி காட்டிகொடுக்கப்பட்டது. – நியூபாக் பப்ளிகேஷன்ஸ் பக்கம் 244)

முக்கிய உற்பத்திச் சாதனங்கள் அரசின் கரங்களில் உள்ளன. ஆனல் இது தொழிலாள வர்க்கத்திடமிருந்து அரசியல் அதிகாரத்தை பிடுங்கிக் கொண்டதன் காரணமாக அரச கருவிகள் அதிகாரத்துவத்தின் கரங்களில் உள்ளன. அது தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக தனது சலுகைகளை பேணிக் கொள்ளவும், பராமரிக்கவும் முதலாளித்துவ பங்கீட்டு தரங்களை நிலைநிறுத்தவும், பலப்படுத்தவும் இதனைப் பயன்படுத்துகின்றது. அதிகாரத்துவம் அதனது கண்ணோட்டம், சமூக வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் அது வெறுக்கின்றதும், அஞ்சுகின்றதுமான சோவியத் தொழிலாள வர்க்கத்தைக்காட்டிலும் மேற்கத்தைய முதலாளி வர்க்கத்துக்கு எண்ணற்றவிதத்தில் நெருக்கமானது.



ஜோசப் ஸ்டாலின் —▷

(17) இது கொர்பச்சேவ் மத்திய குழுவுக்கு ஆற்றிய பேச்சினல் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. அதில் அவர் 'சோசலிசத்தின் மிக முக்கியமான அடிப்படைக் கொள்கை' ''வேலைக்கு ஏற்ப பங்கிடுதலாகும்.' இங்கு மார்க்சிசம் தலை கீழாக்கப்பட்டுள்ளது. கொர்பச்சேவ் முதலாளித்துவப் பங்கீட்டு தரத்தினை சோசலிசத்தின் அடிப்படை ஆக்குகின்ருர்!

சோவியத் பொருளாதாரத்தின் பிரச்சினைகளுக்கு கொர்பச்சேவ் வழங்கிய பதிலை ஒரு முதலாளித்துவ முகாமையாளரின் கையேட்டில் இருந்து எடுக்க முடியும் 'க்ளாஸ்நொஸ்டினதும், 'ஜனநாயகத்தினதும்' அறிமுகம் இந்த நிலைப்பாட்டில் இருந்தே முற்றிலும் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அவரின் பேச்சில் இருந்து பெற்ற கீழ்வரும் பந்தி இதை சந்தேகத்துக்கிடமின்றி தெளிவுபடுத்துகின்றது:

''சில தோழர்கள் ஜனநாயகத்தை உயர்த்துவது என்பது ஒரு பெரும் சுலோகமன்றி மறுசீரமைப்பின் ஆரம்பம் அதுவே என்பதை புரிந்து கொள்ளச் சிரமப்படுவதாகத் தெரிகிறது. நிறுவனங்கள், பக்டரிகள், தொழிற் கூடங்கள், திணைக்களங்கள், துறைகள், பண்ணைகள், கோஷ்டிகள், கோஷ்டி தலைவர்கள், மூகாரிகள் ஆகியவற்றுக்கு தலைவர்களை தேர்தல் மூலம் தெரிவு செய்ய கவனம் செலுத்துவது அவசியம். மறுசீரமைப்பு இடைமாற்றத்தின் இன்றைய கட்டத்தில் இருந்து பொருளாதார முகாமையியரின் புதிய விதிமுறைகள், இலாப நட்ட பொறுப்பு, சுயநிதியீட்டம், சுயதிருப்பிக் கொடுப்பனவு அப் பணியை ஒரு நடைமுறையான தாக்கியுள்ளது...

''இது நிறுவனங்களின் இலாபங்கள், கூட்டு வேலைத்தளத்தில் அங்கத்தினர்களுக்கு வழங்கும் சகல வடிவிலான ஊக்குவிப்புக்கள், சமூக தேவைகளை வழங்கும் அளவு என்பன அவர்களின் வேலையின் இறுதி பெறுபேறுகளிலேயே செய்யப்பட்ட பொருட்களின் தரம், தொகையிலும் வழங்கிடும் சேவையிலுமே-முற்றிலும் தங்கியிருக்கும்.

''இந் நிலைமையின்
பண்ணை விவசாயிகளும் நி
அல்லது கோஷ்டிக்கு யார்
யிட்டு அக்கறை செலுத்த
மையாளர்களின் திறமை
மக்கள் அவர்களின் நியமன
கட்டுப்படுத்தல் ஆகியவற்
ருக்க வேண்டும்.''

மறு வார்த்தையில் செ
பது தொழிலாளி தனது செ
செய்யும் உரிமையாகும்.
ளாதாரத்தின் வரலாற்று
கும் வழக்கமான வேலை
வேலையின்மை மிரட்டலோ
லாளர்களுக்கு அங்குசம் ம
மூலம் தனது சொந்த சலுகை

(18) அதிகாரத்துவத்தின்
ளர்கள்' தொழிலாளர்களு
படுத்த ஊக்குவிக்கப்படுவ
செயல்பாடுகளை தேசியமயம
நிலைப்பாட்டில் இருந்தன்றி
டின்' நோக்கிலேயே அணு

இது புனருத்தாரண ப
நிற்கிறது. இது ட்ரொட்ஸ்
கைத்தொழில் அரங்கில் தே
கும். அதில் 'இடைமரு
அடிப்படைக் கொள்கைகள்
தனி வேலைத் தலங்களுக்கும்
ரசங்களாக மாற்றப்படும்.
கைத்தொழிலின் சோவியத்
யான சாத்தியமான சொத்
அதிகாரத்துவம் ஒரு முதல
தயாரிக்கும் திசையில் சென்
யாளர்கள் சொத்து வடிவங்
கள் என அறிமுகம் செய்து
தம் அன்றி ஒரு சமூகப் புரட்
253)

மேலும் கொர்பச்சேவின்
உற்பத்தியையும் வர்த்தகத்
படை மட்டத்தில் மூலதன
விக்கின்றது.

கடந்த வருடம் சோவிய
தனிப்பட்ட ஊழியம் மீதா
நுகர்வுப் பொருட்கள், சே
அடிப்படையில் தனியார் ஊ
சந்தையை சட்ட ரீதியான

இந்த வழியில் சிறிய வா
பலமான தட்டினர் அல்லது சி
டுப் புறங்களில் மட்டுமன்றி;
பட்டு வருகின்றனர் அதிகா
யும், சேவைகளையும் கொள்வ
வனவுக்காரர் என்ற விதத்தி
பொருளாதாரத் தொடர்புக
டுள்ளனர்.

இந்தத் தனிப்பட்ட இ
கொர்பச்சேவுக்கு உலகப் பூரா
ஆதரவை கொணர்ந்துள்ளது
தமது முதல் உத்தியோக பூர்
போது விலை உயர்ந்த ஆபர
பிரஸ் காட்டின் மூலம் ப
அனைத்து 'ஹிப்பி'களதும்
கொண்டனர்.


பெரும் பக்டரிகளுக்கு இ
யார் வர்த்தகத்தின் விரிவாக்க
களும் அதிகாரத்துவத்தினை
தொழிலாள வர்க்கத்தின் உள்
களுக்குமான அடிப்படையை
மென் புதிய தலைமுறையின
மளிப்பதன் மூலமும் சலுகைச
துவ சாதியானது போனபாட்
தாயத்தின் மீதான ஒரு நடுவர்
தன்னை உறுதிப்படுத்திக் கொ

(19) எந்தவொரு கட்டத்திலு

> ''தொழிலாளர் பாதை''
> **சந்தாதாரர் ஆகுங்கள்!**
>
> அஞ்சல் கட்டணம் உட்பட
> ''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:
>
> 1 மாதம் — ரூ. 4.00 3 மாதம் — ரூ. 12.00
> 6 மாதம் — ரூ. 24.00 1 வருடம் — ரூ. 48.00
>
> பெயர் :..............................................
> முகவரி :............................................
> சந்தாக் காலம் :.................... ரூ: ......... சதம் ......
>
> சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
>
> நிர்வாகி,
> ''தொழிலாளர் பாதை''
> இல. 90, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை,
> கொழும்பு — 10.

# ...தென்ன?

3ம் பக்கத் தொடர்ச்சி



ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு எதிரான ஹங்கேரி தொழிலாளர் எழுச்சி 1956

தொழிலாளர்களும், கூட்டு
னங்கள், வேலைத்தலம், துறை
மை தாங்குகிறார்கள் என்பதை
ண்டும். கூட்டின் நலன் முகா
தங்கியுள்ளதால் உழைக்கும்
அவர்களின் நடவடிக்கைகளை
ஒரு நிச சக்தியை கொண்டி

..சேவின் 'ஜனநாயகம்' என்
த அடிமை ஓட்டியை தெரி
காரத்துவம் சோவியத் பொரு
க்கடியை சகல முதலாளிகளுக்
த்தல், சம்பள வெட்டு
திகரித்த உற்பத்திக்கு தொழி
டுதல் போன்ற விதிமுறைகள்
ளைப் பேணுகின்றது.

தட்டினரான 'முகாமையா
எதிராக சாட்டையை பயன்
டு அவர்க பொருளாதார
கப்பட்ட பொருளாதாரத்தின்
வர்களின் தனிப்பட்ட 'கூட்
ர்

தயில் ஒரு அடியை குறித்து
சுட்டிக் காட்டியது பான்று
மய ஒழிப்பு வடிவத்தினை எடுக்
லப்பகுதிக்கான திட்டமிடும்
ரச அதிகாரத்துக்கும் தனித்
டையேயான ஒரு தொகை சம
கு 'வேலைத்தலங்கள்' என்பது
கப்டன்களுக்கும்' இடையே
மையாளர்களே. சோவியத்
த்துவப் புனருத்தாரணத்தை
ள போதிலும் புதிய ஆட்சி
, கைத்தொழில் விதிமுறை
க்கப் போவது ஒரு சீ திருத்
ாகும்.'' (அதே நூல் பக்கம்

சீர்திருத்தங்கள் தனிப்பட்ட
யும் அதாவது மிகவும் அடிப்
திரட்சியை வேகமாக ஊக்கு

யர்சபை (சுப்ரீம் சோவியத்)
சட்டத்தை' இயற்றி து.
கள் அரங்கில் 'தனிப்பட்ட
த்தை' அனுமதிக்கும் கறுப்பு
யது.

நகர்களினைக் கொண்ட ஒரு
இலாபமீட்டுவோர் – நாட்
ரங்களிலும் கூட உருவாக்கப்
துவம் அதன் பொருட்களை
செய்யும் முக்கிய கொள்
இந்தத் தட்டினர் ஆரம்
ல் அதனுடன் பிணைக்கப்ப..

பமீட்டலின் அறிமுகமானது
உள்ள மத்தியதர வர்க்க
அவரின் மனைவி றெயிசா
ான லண்டன் விஜயத்தின்
க்கு அமெரிக்கன் எக்ஸ்
செலுத்தியபோது அவள்
தயத்தில் இடம் பிடித்துக்

டயேயான போட்டி. தனி
என்ற இவ்விரு நடவடிக்கை
ங்கிப் பிடிக்க உதவுகிறது.
பிரிவுகளுக்கும் வேறுபாடு
ஷ்டிப்பதன் மூலமும் நெப்
காற்றத்துக்கு ஊக்க
பிக்க ஒட்டுண்ணி அதிகாரத்
அரசின் தலைமையில் சமு
ற முறையில் அதனது அந்
முடியும்.

கொர்பச்சேவின் சீர்திருத்

தங்கள் அதிகாரத்துவ சாதியின் சட, சமூக சலுகைகளில் கைவைக்கவேயில்லை.

கொர்பச்சேவ் தமது மத்திய குழுவுக்கான உரையில் 'ஒட்டுண்ணிதனம்' எனக் குறிப்பிட்டபோது அவர் அதிகாரத்துவத்தின் முழு ஊழலையும் செல்வத்தின் த ப்பங்கை ஏப்பமிடும் அதிகாரத்துவத்தையன்றி சோவியத் தொழிலாளர்களையே குறிப்பிட்டார். அவர் இதனை 'சமப்படுத்தும் மனப்போக்கில்' ஒரு பல அர்த்தத்தில் அதாவது, எல்லா வடிவிலான ஊழியத்துக்கும் பெரும் சமத்துவமான கூலி ன் வழங்கும் அடிப்படை சோசலிச கொள்கைக்கு எதிரான ஒரு வாதமாகவே பயன்படுத்தினர்,

''ஒட்டுண்ணி உணர்வுகள், பலமாக வளர்ச்சி கண்டதோடு கூலி மட்ட மனோபாவம் இடம் பிடித்துக் கொள்ளத் தொடங்கியது. இவை எல்லாம் வாழ்க்கையை சோம்பேறிகளுக்கு சுலபமாக்கிக் கொடுத்த வேளையில் நன்றாக வேலை செய்ய கூடிய நன்றாக வேலை செய்ய விரும்பிய தொழிலாளர்களை தாக்கியது.

''அடிப்படை வேலை நிலைமைகள் மீதான தாக்குதல்– தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்தல், வேலை முறைபை அமுல் செய்தல் முதலானவை–உண்மையில் அதிகரித்த உற்பத்தித் திறனுக்கான கொர்பச்சேவ் பிரச்சாரத்தின் இதயமாக விளங்கியது. இது 'ஜனநாயகம்' என்ற மூடுதிரையின் கீழ் அமுல் செய்யப்பட்டது. மத்திய குழுவின் முன்னிலையில் அவர் ஜம்பம் அடிக்கையில்:

''லெனின்கிராட்டினும் முழுப் பிராந்தியத்திலும் அனைத்து முன்னணி பக்டரிகளிலும் இரண்டு, மூன்று வேலை முறைக்கு மாற்றப்பட்டுள்ளன. மாலை வேலைமுறை தொழிலாளர்களின் எண்ணிக்கை கிட்டத்தட்ட 50,000ஆல் அதிகரிக்க இடமளித்துள்ளது.

(20) கொர்பச்சேவ் அதிகாரத்துவம் முக்கியமாக கவலைப்படுவது அரசியல் புரட்சியின் அச்சுறுத்தலையிட்டே. ஆட்சியில் உண்டான ஊழல்கள் சீரழிவுகளையிட்டு அஞ்சுகிறது, பிரெஷ்நேவின் கீழ் ஏற்பட்ட இவை சமூக இருப்பின் மூலமான அரச கருவிகளினைப் பலவீனப்படுத்தும் கட்டத்தை அடைந்துள்ளது.

பிரெஷ்நேவ் சகாப்தம், என்ற லாத பகிரங்க ஊழல்கள், அவதூறுகள், ஆளும் தட்டினரின் அப்பட்டமான காடைத்தனங்களைக் குறித்து நின்றது. பொருளாதாரத்தின் தொடர்ச்சியான தேக்கத்துடன் கூடிய இந்த அதீதங்கள் தனக்கு எதிரான ஒரு இயக்கத்தினை தொழிலாள வர்க்கத்தினுள் உருவாக்கும் என அஞ்சுகின்றது, இது ஜனவரியில் கொர்பச்சேவ் மத்திய குழுவுக்கு ஆற்றிய உரையில் சுட்டிக் காட்டப்பட்டது! நம்பிக்கையும், அதிகாரமும் வழங்கப்பட்டுள்ள சிரேஷ்ட அதிகாரிகளின் நடவடிக்கையையிட்டு உழைக்கும் மக்கள் கொண்டுள்ள நியாயமான வெறுப்பினை நாம் புறக்கணித்துவிட முடியாது. இவர்கள் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தனர், கண்டனங்களை நசுக்கினர், இலாபமீட்ட முயன்றனர். இவர்களில் சிலர் கொலைகார நடவடிக்கைகளின் அமைப்பாளர்களாக இல்லாது போகினும் அவற்றின் சகபாடிகளாகவும் மாறினர்.

''சட்டங்களை அசட்டை செய்தல், அறிக்கை திணிப்பு, லஞ்சம் வாங்குதல், காக்காய் பிடிக்கவும், முகஸ்துதி செய்யவும் ஊக்குவித்தல் என்பன சமுதாயத்தில் ஒழுக்க சூழ்நிலையில் நாசகரமான தாக்கங்களை ஏற்படுத்தின.''

பிரஷ்நேவ் ஆட்சியின் கீழ் இடம் பெற்றதும் அதிகாரத்துவத்தின் பகுதியினர் பேணிக்காக்க முயல்கின்றதுமான அப்பட்டமான ஊழல்களுக்கும் பொருளாதார கூறை டல்களுக்கும் எதிரான பிரச்சாரம் மிகவும் ஆழமாக வேரோடிய பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்க்க முடியாது. இந்நெருக்கடிக்கான மூலம் சோவியத் பொருளாதார அபிவிருத்தியே.

எவ்வளவுக்கு உற்பத்திச் சக்திகள் அபிவிருத்தி செய்யப்படுகிறதோ, அவ்வளவுக்கு சோவியத் பொருளாதாரத்தின் தன்மை சிக்கலாகின்றது. அதிகாரத்துவ ஆட்சியே பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு தடையாகவும் பெரும் முரண்பாடுகளுக்கான மூலமாகவும் ஆகின்றது.

எவ்வளவுக்கு சோவியத் பொருளாதாரம் வளர்ச்சி காண்கிறதோ அவ்வளவுக்கு அது தரம் (பற்றிய) பிரச்சினைக்கு உள்ளாகுவதாக ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டார். ஒரு தேசியமயமாக்கப்பட்ட பொருளாதாரத்தின் கீழ் தரமானது உற்பத்தியாளர்களதும் பாவனையாளர்களதும் (நுகர்வோரதும்) ஜனநாயகத்தையும், கண்டனம், தொடக்கி வைப்புக்கான சுதந்திரத்தை''யும் வேண்டி நிற்கின்றது. இவை அச்சம், பொய் முகஸ்துதிகளைக் கொண்ட ஒரு சர்வாதிகார ஆட்சியுடன் பொருந்தாத நிலைமைகளாகும்.''

தரம் பற்றிய பிரச்சினையின் பின்னால் ''ஒரு மிகவும் சிக்கலானதும் ஆடம்பரமானதுமான பிரச்சினை உள்ளது. இதனை சுதந்திரம், தொழில்நுட்ப, கலாச்சார கருத்துக்கு சிருஷ்டியினுள் உள்ளடக்கலாம்'' என அவர் குறிப்பிட்டார் (அதே நூல் பக்கம் 246)

இறுதியாக அவர் 'சோவியத் ஜனநாயகம் என்பது ஒரு வெறும் கொள்கைக்கான கோரிக்கை அன்று. அவ்வாறே அது வெறும் ஒழுக்கவியலுக்கான கோரிக்கையும் அன்று. இது நாட்டின் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான தேவையாகி உள்ளது.'' என்றார்.

21) ஆனால் தொழிலாள வர்க்கத்திடம் இருந்து அரசியல் அதிகாரத்தைப் பிடுங்கிக் கொண்ட அதிகாரத்துவத்தினால் சோவியத் ஜனநாயகத்தை புனருத்தாரணம் செய்ய முடியாது. அங்ஙனம் செய்வதானது அதிகாரத்துவத்தின் வாழ்வினையே சீர்திருத்தம் செய்வதாகும். இது எந்தவொரு சலுகைகள்மிக்க சமூக தட்டினரும் செய்துள்ள அல்லது இனிமேல் செய்ய கூடியதன்று, அதன் சலுகைகள் அதன் அரசியல் அதிகாரத்தின் ஏகபோகத்தையே அடிப்படையாகக் கொண்டுள்ளதே காரணம்.

கொர்பச்சேவின் ''சீர்திருத்தங்களின்'' சாராம்சங்கள் இன்று வெளிவரத் தொடங்கி உள்ளன, சோவியத் தொழிலாள வர்க்க இயக்கத்துக்கு அஞ்சி, அதிகாரத்துவ ஆட்சியினாலேயே சிருஷ்டிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்திக்கான தடைகளை தாண்டும் முயற்சிகளில் அதிகாரத்துவம் ஈடுபட்டுள்ளது.

முதலாளித்துவ பங்கீட்டு முறைகளை விஸ்தரிப்பதன் மூலமும், வெளிநாட்டு வர்த்தகத்தில் அரச ஏகபோகத்தை பலவீனப்படுத்துவதன் மூலமும் தனியார் நிறுவனங்கள் பணத்தை மூலதனமாக மாற்றுவதற்கான வழிகளை திறப்பதன் மூலமும் அதிகாரத்துவம் தொழிலாளர் அரசில் உலக ஏகாதிபத்தியத்தின் ஏஜன்டாக தொழிற்படுகின்றது.

கொர்பச்சேவின் 'ஜனநாயக' நடவடிக்கைகளான சில அரசியல் கைதிகளை விடுதலை செய்தமை, தணிக்கையை வரையறைக்குட்பட்டு தளர்த்தியமை, அதிகாரத்துவ மேலதிகங்களை கண்டனம் செய்தமை எந்த அர்த்தத்திலும் சோவியத் ஜனநாயகத்தை புனருத்தாரணம் செய்யும் வழியில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை அன்று. இவை சோவியத் புத்திஜீவிகள், முகாமையியல் அதிகாரிகளிடையே அதிகாரத்துவத்துக்கு ஆதரவாக ஒரு சமூக அடிப்படையை வென்று கொள்வதற்கான ஒரு முயற்சியாகும்.

★ 6ம் பக்கம் பார்க்க

# சோவியத் யூனியனில் . . .

— 5ம் பக்கத் தொடர்ச்சி —

அதிகாரத்துவத்தின் 'ஜனநாயக' நடிப்புக்கள் உண்மையில் தமது சொந்த ஆட்சியை பலப்படுத்தும் பொருட்டு தொழிலாள வர்க்கத்தினை முழுச் சனத்தொகையினுள்ளும் அரசியல் ரீதியில் கரைத்துவிடுவதையும், சோவியத் யூனியனில் தொடர்ந்திருந்துவரும் வர்க்க குரோதங்களை சாதுர்யமாகக் கையாள்வதையும் இலக்காகக் கொண்டிருந்தது. கொர்பச்சேவ் ஆளும் கட்சியினுள் 'ஜனநாயக' தேர்தல்களை அறிமுகம் செய்யப் பிரேரித்துள்ளார். ஆனால் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொழிலாள வர்க்கக் கட்சியன்றி அதிகாரத்துவ கருவிகளின் அரசியல் இயந்திரமாகும். சோவியத் ஜனநாயகம் என்பதன் அர்த்தம், தொழிலாள வர்க்கம் சமுதாயத்தின் மீதான தமது சர்வாதிகாரத்தை ஜனநாயக ரீதியில் கட்டுப்படுத்துவதேயாகும். இது அவர்களின் தொழிற் சங்கங்கள், பக்டரி கமிட்டிகள், உள்ளூர், பிராந்திய, தேசிய சோவியத்துகளில் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டினை வேண்டி நிற்கின்றது.

கொர்பச்சேவின் சீர்திருத்தங்கள் 'ஜனநாயக'' அதாவது முதலாளித்துவ மேற்கத்தைய நாடுகளில் ஒரு முதலாளித்துவ பொதுஜன அபிப்பிராயத்துக்கான ஒரு பகிரங்க மேன்முறையீட்டுடன் பிணைக்கப்பட்டுள்ளது. இந் நடவடிக்கைகளில் ஈடுபடும்படி கொர்பச்சேவ் தள்ளப்பட்டிருப்பதானது சோவியத் தொழிலாள மக்களுக்கும் அதிகாரத்துவத்துக்கும் இடையேயான ஆழமான பதட்டங்களை சுட்டிக்காட்டுகின்றது. சோவியத் தொழிலாளர்கள், முழு அதிகாரத்துவத்தையும் தூக்கி வீசி, பாட்டாளி வர்க்கம் அரசியல் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிக்கொள்ள இந்த நெருக்கடிக்குள் மூழ்கிப்போயுள்ள ஆட்சியினரால் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு வாய்ப்பினையும் கட்டாயம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

22) அனைத்து ஆட்சியையும் போலவே கொர்பச்சேவின் வெளிநாட்டுக் கொள்கையானது அதன் தேசியக் கொள்கையின் ஒரு தொடர்ச்சியாகும். சோவியத் யூனியனின் உள்ளே தொழிலாள வர்க்கத்தின் அரசியல் புரட்சி ஆபத்துக்கு எதிராக அதன் கொள்கைகள் விளங்குவது போலவே அனைத்துலக அரங்கில் சமூகப் புரட்சிக்கு எதிராக ஏகாதிபத்தியத்துடன் எதிர்ப்புரட்சி கூட்டாக அதன் கொள்கை விளங்குகின்றது: கொர்பச்சேவின் ''சீர்திருத்தங்கள்'' உலகின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள புரட்சிகர தொழிலாள வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் பேராபத்துக்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளன என நாம் எச்சரிக்கை செய்கின்றோம். ஏகாதிபத்தியத்துடன் ''சமாதான சகவாழ்வு'' நடாத்தும் இதன் முயற்சியில் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம் தென் ஆபிரிக்க வெகுஜனங்களையும் பாலஸ்தீன மக்களையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிவரும் நிகரகுவா மக்களையும் அத்துடன் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாள வர்க்கத்தையும் காட்டிக் கொடுக்கின்றது.

'பிராந்திய பதட்டங்களை தணித்தல்'' என்னும் எதிர்ப்புரட்சி சுலோகத்தின் கீழ் மாஸ்கோ அதிகாரிகள் தென் ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, மத்திய அமெரிக்க மக்களின் புரட்சிகர உழைப்புக்களுக்கு எதிராக ஒரு கூட்டு நிலைப்பாட்டை எடுக்கும் பொருட்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளுடன் அடிக்கடி இரகசிய கூட்டங்களை நடாத்தி வந்துள்ளனர்.

கொர்பச்சேவ் தலைமை ஏகாதிபத்திய முதலாளி வர்க்கத்துடன் நெருக்கமாகி வருகின்றது என்ற உண்மை ரேகனால் நீகனாலேயே அங்கீகரிக்கப்பட்டுள்ளது, ஈரான் - கொன்ட்ரா நெருக்கடி வெள்ளை மாளிகையை முற்றுகையிட்டுக் கொண்டதும், கொர்பச்சேவ் ஆயுதக் குறைப்பு பற்றிய ஒரு புதிய கொடுக்கல் வாங்கல்களை சமர்ப்பிப்பதன் மூலம் றீகனை ஆபத்திலிருந்து மீட்க முயன்றார். ஈரான்-கொன்ட்ரா விவகாரம் சம்பந்தமான டவர் ஆணைக்குழு அறிக்கை பற்றி றீகன் குறிப்பிடுகையில் ''நாம் அடைபாளங்களை சரியாக வாசிப்பின்'' மாஸ்கோ அவரை ''பணியை தொடரும்படி'' கேட்டதாக தெரிவதாக பிரகடனம் செய்தார்.

கொர்பச்சேவின் கொள்கையின் அனைத்துலக தாக்கங்களை மேலும் சுட்டிக்காட்டும் விதத்தில் அவரின் வெளிநாட்டு அமைச்சர் செவ[illegible]சே ஒரு தூரகிழக்கு விஜயத்தை மேற்கொண்டார். இ[illegible] இந்தோனேசிய கசாப்புகாரன் சுகார்டோவுடன் சிநேக பூர்வமான கூட்டங்களை நடாத்தினார், இவை 1965ல் இருந்து சிறைவைக்கப்பட்டிருந்த கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் தூக்கிலிடப்பட்ட ஒரு கிழமையின் பின்னரே இடம் பெற்றன. இதைத் தொடர்ந்து அவர் வியட்னாமிலும் தங்கினார். அங்கு தாம் நிகழ்த்தவிருந்த ஒரு பேச்சினை இரத்துச் செய்ததன் மூலம் அவர் ஹனோய் தலைமையை வேண்டும் என்றே மட்டம் தட்டினார், இது சோவியத் ஸ்டாலினிஸ்டுகள் வாஷிங்டனுடனும் பீகிங்குடனுமான மாஸ்கோ இராஜதந்திர குதிரை வர்த்தகத்தை விருத்தி செய்யும் பொருட்டு வியட்னாமுக்கான பொருளாதார, இராணுவ உதவிகளை வெட்டவும் கம்போடியாவில் வியட்னாமியர்களின் பிரசன்னத்துக்கு ஆதரவளிப்பதை நிறுத்தவும் விடுக்கப்பட்ட ஒரு கணிப்புமிக்க சமிக்கையை பிரதிநிதித்துவம் செய்தது.

23) அதிகாரத்துவம் சோவியத் யூனியனை பேணுவது என்பது, அதன் சட்டரீதியான வசதி வாய்ப்புக்களின் பிராந்திய அடிப்படையை பராமரிக்கும் நிலைப்பாட்டில் இருந்தே முற்றிலும் ஆரம்பிக்கின்றது. ஒரு புறத்தில் ஆயுதப் பரிகரணம் செய்யுமாறு ஏகாதிபத்தியவாதிகளை அஹிம்சை பாணியில் வேண்டுவதும் மறுபுறத்தில் ஆப்கானிஸ்தான் போன்ற இராணுவ சாகசங்களில் ஈடுபடுதல் போன்ற விதிமுறைகள் தொடர்ச்சியான கோர விளைவுகளுக்கு மட்டுமே இட்டுச் சென்றுள்ளன.

1979ல் 'சோல்ட்–2' உடன்படிக்கையில் கைச்சாத்திட அமெரிக்காத நியதில் இருந்து சோவியத் யூனியன் வழங்கிய சலுகைகள் மேற்கு ஐரோப்பாவில் 'குரெய்ஸ்', 'பேசிங் ஏவுகணைகளை நிறுத்தி வைக்கவும் றீகனின் நட்சத்திரப் போர்த் திட்டங்களை ஆரம்பிக்கவும், வேறும் பல சலுகைகளை கோருவதிலும் போய் முடிந்தது.

கொர்பசேவின் சமீபத்திய நடுத்தர ஏவுகணைகள் பற்றிய நடவடிக்கைகள் சகல மத்தியதர வர்க்க அஹிம்சைவாதிகளாலும் வரவேற்கப்பட்டன. உண்மையில் அவை சோவியத் யூனியனின் இராணுவ பந்தோபஸ்தை ஆபத்துக்குள்ளாக்குகின்றது. இந்த பொறுப்பற்ற கொள்கையின் பின்னணியில் இராணுவ செலவினங்களை வெட்டுவதன் மூலம் சிருஷ்டிக்கப்பட்ட பொருளாதார நெருக்கடியை தீர்த்துவிட அதிகாரத்துவம் முயல்கின்றது. ஆனால் வரலாறு திரும்பத் திரும்ப வெளிப்படுத்தியதுபோல், அத்தகைய ஒரு கொள்கை சமாதானத்தை உறுதி செய்வதற்கு மாறாக ஏகாதிபத்தியத்தை அதன் யுத்தத் தயாரிப்புக்களை உக்கிரப்படுத்த மட்டுமே ஊக்குவிக்கின்றது.

ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வெளிநாட்டுக் கொள்கையானது லெனினால் எழுதப்பட்டு 1919ம் ஆண்டு காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட போல்ஷிவிக் கட்சியின் வேலைத்திட்டத்திற்கு முற்றிலும் எதிராக உள்ளது! ''அஹிம்சை, முதலாளித்துவத்தின் கீழ் அனைத்துலக ஆயுதபரிகரணம், மத்தியஸ்த நீதிமன்றங்கள் முதலான சுலோகங்கள் பிற்போக்கு கற்பனாவாதங்கள் மட்டுமன்றி பாட்டாளி வர்க்கத்தை நிராயுதபாணிகளாக்கவும் சுரண்டலாளர்களை நிராயுதபாணியாக்கும் பொறுப்பிலிருந்து இதனை தடம் புரட்டவும் திட்டப்பட்ட உழைக்கும் மக்களினை அடியோடு ஏமாற்றும் மோசடியாகும்'',

24) ஏகாதிபத்தியம் தொடர்பான இந்த அஹிம்சை, சகவாழ்வு கொள்கையானது அதிகாரத்துவ சாகஜங்களுடனும் ஆப்கானிஸ்தானில் வெளிக்காட்டப்பட்டதுபோல் காலனித்துவ மக்களின் பேரில் காட்டும் முழுப்படியான நிந்தனையுடனும் இணைந்து கொண்டுள்ளது. எட்டு வருட கால அதன் கொலைகாரத்தனமான இராணுவத் தலையீட்டின் பின்னர், ஸ்டாலினிஸ்டுகள் மத்திய கிழக்கு பூராவும் செஞ்சேனையினதும் சோவியத் யூனியனதும் பெயரை அவமானத்துக்குள்ளாக்கவும் சோவியத் படையினரிடையே பேரளவிலான சேதங்களை உண்டுபண்ணுவதிலும் மட்டுமே வெற்றி கண்டனர்.

இன்று ஏகாதிபத்தியத்துடனான அதனது இராஜதந்திர சூழ்ச்சிகளின் ஒரு பாகமாக வலதுசாரி பாகிஸ்தான் சர்வாதிகாரி ஷியாவுடனும், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனும் பேரம் பேசிக்கொண்ட நிலைமைகளின் கீழ் ஒரு படை விலக்கலுக்கு தயார் செய்து வருகின்றது. இப்பேரம் பேசல்களின் விளைவுகள் என்னவாக இருந்தபோதிலும் ஆப்கான் தலையீட்டின் இறுதிப் பெறுபேறானது சோவியத் யூனியனின் இராணுவப் பந்தோபஸ்தினை பலவீனப்படுத்துவதே. ஆப்கானிஸ்தானினுள் சி.ஐ.ஏ.க்கு வழி திறப்பது, இப்பிராந்தியத்தில் உள்ள ஒடுக்கப்படும் மக்களிடையே சோவியத் யூனியனின் ஆதரவை அரிப்பது என்ற இரு வழிகளில் இதைச் செய்துள்ளது.

இந்த அனுபவங்கள் ஏகாதிபத்தியத்துடனான 'தனி ஒரு நாட்டில் சோசலிசம்', 'சமாதான சகவாழ்வு' முதலான எதிர்ப்புரட்சி கொள்கைகளின் அடிப்படையில் சோவியத் யூனியனைப் பேணிக் கொள்ள அதிகாரத்துவத்தின் இயலாமையில் இருந்து பலமான விதத்தில் வெளிப்பட்டுள்ளன,

— தொடரும்

## ட்ரொட்ஸ்கியின் நூல்கள் ருஷ்யாவில் பிரசுரிக்கப் படும்.

லியோன் ட்ரொட்ஸ்கியின் படைப்புக்களில் சிலவற்றை அடுத்த வருடம் வெளியிடும் தயாரிப்புக்களில் கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்று கழகத்தின் அறிவாளிகள் ஈடுபட்டுள்ளதாக அரச வெளியீட்டுக் குழுவின் அதிகாரியான விக்டோரியா செறமிக் மாஸ்கோ வானொலியில் அறிவித்துள்ளார்.

ட்ரொட்ஸ்கியின் படைப்புக்களை வெளியிடும் இந் நடவடிக்கை, நாட்டின் கடந்த காலத்தினை பற்றிய ஒரு முழுச் சித்திரத்தினை வழங்கும் முயற்சியாகும் என செறமிக் தெரிவித்துள்ளார்.

வீ, ஐ. ஸ்டாட்சேவினால் எழுதப்பட்ட 'சோவியத் ருஷ்யாவின் வரலாறு' என்ற தலைப்பிலான ஒரு கட்டுரை அதிகார பூர்வமான ஏட்டில் வெளியானதைத் தொடர்ந்தே இந்த அறிவித்தல் வெளியாகியுள்ளது; இந்த ஸ்டாட்சேவ் லெனின் ட்ரொட்ஸ்கியை போல்ஷிவிக் தலைமையில் மிகத் திறமை வாய்ந்த அங்கத்தவர்'' எனக் குறிப்பிட்டதை நினைவுபடுத்துவதோடு ஒரு உடர்மட்ட பிளவு ஏற்படுவதைத் தடுக்க நாம் அவருடன் ஒரு கூட்டினை அமைக்க முயன்றதாகவும் சொன்னார்.

ஸ்டாலினின் வாரிசுகளான சோவியத் அதிகாரத்துவம் கொர்பச்சேவின் ''க்ளாஸ்நொஸ்ட்'' கொள்கை சினோவியேவ், கமனேவ், புகாரின் போன்ற போல்ஷிவிக் தலைவர்களின் புனர்வாழ்வுக்கிடையேயும் ட்ரொட்ஸ்கிக்கு புனர்வாழ்வு அளிப்பது பற்றியோ அல்லது அவர நூல்களை வெளியிடுவது பற்றியோ பேசத் தயக்கம் காட்டி வந்தது.

ருஷ்யப் புரட்சியின் இணைத் தலைவரும் செஞ்சேனையின் தலைவருமான ட்ரொட்ஸ்கி ஸ்டாலினிச அதிகாரத்துவ எழுச்சியை ஆய்வு செய்து, அது சோவியத்தையும் உலக தொழிலாள வர்க்கத்தையும் காட்டிக் கொடுப்பதையும் உலக சோசலிச புரட்சியின் வேலைத் திட்டமான மார்க்சிசத்தின் நிலைப்பாட்டின் அடிப்படையில் எதிர்த்துப் போராடினார்.

# ஐக்கிய முன்னணி...

கடந்த சில தினங்களில் அரசாங்கத்தின் யுத்த சட்ட மிரட்டல்களின் மத்தியில் வேலைக்கு சென்ற இலங்கை போக்குவரத்துச் சபையின் மஹரகமை, தலங்கமை டிப்போக்களின் தொழிலாளர்கள் பலர் மக்கள் விடுதலை முன்னணியின் படுகொலை படையாணிகளினால் கொலை செய்யப்பட்டதால் பல டிப்போக்களில் இடம்பெற்ற திட்டவட்டமான வேலை நிறுத்தங்கள் அரசாங்கத்தினதும், மக்கள் விடுதலை முன்னணியினதும் மிரட்டல்களுக்கு எதிராக தமது உரிமைகளைக் காக்கும் தொழிலாளர்களின் பிரமாண்டமான அவசியத்தின் மட்டத்தை சுட்டிக் காட்டிற்று வேலைத்தலங்களில் திரண்டுள்ள கிராமப்புற ஏழைகளும் இம் மிரட்டல்கள் இருந்து விடுபடுவது அவசியம். இப் பிரமாண்டமான அவசியத்தை அங்கீகரித்து நாம் தொழிற்படுவது தொழிலாள வர்க்கத்தின் எதிர்கால தலைவிதியை தீர்மானிக்கும்.

இந் நிலைமையினுள் யூ.என்.பி. அரசாங்கத்தின் இராணுவ பிற்போக்குக்கும் ம.வி.மு. குட்டி முதலாளித்துவ பிற்போக்குக்கும் எதிராக: ஒடுக்குமுறைச் சட்டங்களை அகற்று! பேச்சு, கூட்டம், ஒன்றுகூடல் உரிமைகளில் கை வைக்காதே! தொழிற் சங்கங்களில் கை வைக்காதே! பத்திரிகை, சுவரொட்டி, துண்டுப் பிரசுரம் உள்ளடங்கலான பிரசுர உரிமைகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை அகற்று! வேலை நிறுத்தம், வேறு கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் எதிராக விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை அகற்று! வேலைத் தலங்களில் இராணுவ பொலிஸ் படையாளி, குண்டர் அணிகளை அகற்று! முதலான சுலோகங்களின் கீழ் அடிப்படை ஜனநாயக உரிமைகளை காக்கும் பொருட்டு கீழ்க் கண்ட ஒன்றுபட்ட நடவடிக்கைகளை ஒழுங்கு செய்யவேண்டும் என நாம் பிரேரிக்கின்றோம்.

1. சகல வேலைத்தலங்கள், தொழிலாளர் வதிவிடங்களில் தொழிலாளர் பாதுகாப்பு படை அணிகளை கட்டி எழுப்பி, அவை ஒன்றிணைந்து செயற்படுவதற்கான நடவடிக்கை கமிட்டிகளை நிறுவுதல்.

2. தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஒன்றிணைந்த மறியல் அணிகளை ஒழுங்கு செய்தல்.

3. தொழிலாள வர்க்க அமைப்புக்களின் ஒன்றிணைந்த ஊர்வலங்களை ஒழுங்கு செய்தல்.

4. தொழிற் சங்கங்களின் பொது வேலை நிறுத்தத்துக்கு ஒழுங்கு செய்தல், தொழிற் சங்கங்களிலும் மற்றும் தொழிளால வர்க்க அமைப்புக்களதும் உதவியை இந்த வேலை நிறுத்தத்தினை ஒழுங்கு செய்ய அணிதிரட்ட வேண்டும்.

நம் அமைப்புக்கள் இடையே அரசியல் வேறுபாடுகள் இருந்த போதிலும் தொழிலாள வர்க்கத்தின் பேரில் தோன்றிவரும் எமது அமைப்புக்கள் வர்க்க எதிரியின் கொடிய எதிர்ப்புரட்சி பாய்ச்சலுக்கு எதிராக மேற்சொன்ன விதத்தில் தொழிலாள வர்க்க சக்தியை ஐக்கியப்படுத்தி பதிலடி கொடுக்கும் பொறுப்பில் இருந்து விலகி நிற்க முடியாது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். அவ்வாறே தொழிலாளவர்க்கத்தை அணிதிரட்டுவதை உடனடியாக செய்ய வேண்டும் என்பதையும் தாங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என எண்ணுகின்றோம். தாமதம் காட்டுவது எதிரிக்கு வாய்ப்பான நிலைமையாகும்.

மேலே குறிப்பிட்ட அடிப்படை ஜனநாயக உரிமைகளை காக்கும் பொருட்டு மேற்சொன்ன வர்க்க நடவடிக்கைகள் உள்ளடங்கலான வேலைத்திட்டங்களை கலந்துரையாட பேராளர்களை அனுப்புமாறு தங்கள் அமைப்பினை வேண்டுகின்றோம்.

அதன் பொருட்டு நாம் பிரேரிக்கும் காலம், நேரம், இடம் வருமாறு: 1988 டிசம்பர் 2 வெள்ளிக்கிழமை மூற் பகல் 10 மணி, 90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு 10ல் அமைந்துள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக தலைமைக் காரியாலயம்.

கலந்துரையாடலுக்கு இந்த அழைப்பிதழின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன. எனினும் ஒன்றுபட்ட நடவடிக்கையை ஒழுங்கு செய்கையில் இவ்வமைப்புக்களைச் சேராத ஏனைய தொழிலாள வர்க்க அமைப்புக்களையும் அழைக்க முடியும். தங்களின் கருத்துக்களையும் பதிலையும் விரைவில் அறியத்தரின் நன்றியுடையவர்களாவோம்.

லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ், நவ சமசமாஜக் கட்சித் தலைமைகளுடன் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு அமைக்க பிரேரித்துள்ள ஐக்கிய முன்னணியின் நடைமுறைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், அதற்காக உத்சாகமாக தலையிடுமாறும் அவற்றின் தலைமைகளை வேண்டிக் கொள்ளுமாறு அந்த அமைப்புக்களின் அங்கத்தினர்களிடமும், ஏனைய தொழிலாள வர்க்க அமைப்புக்களிடமும் நாம் வேண்டிக் கொள்கின்றோம். பு.க.க. பிரேரித்துள்ள ஐக்கிய முன்னணித் தொழிற்பாடுகள் வர்க்க எதிரியின் கடைகெட்ட தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாள வர்க்கத

## 2ம் பக்கத் தொடர்ச்சி

2ம் பக்கத் தொடர்ச்சி

தை சுயாதீனமாக அணி திரட்டும் போராட்டத்தில் வர்க்கப் போராட்டத்தை அபிவிருத்தி செய்யவும் ஐக்கியத்தின் பதாகையை உயர்த்தவும் பிரமாண்டமான முன் நடவடிக்கையாக விளங்கும் என நாம் நம்புகின்றோம்

ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளுக்காகப் பிரச்சாரம் செய்யும் அதேசமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் யூ.என்.பி. அரசாங்கம் தயார் செய்யும் இராணுவ-பொலிஸ் சர்வாதிகாரத்தினையும் குட்டி முதலாளித்துவ மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்ப்புரட்சித் தாக்குதல்களையும் தோற்கடிக்கும் மாற்று புரட்சிகர வேலைத் திட்டத்தின் அடிப்படையில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்காகப் போராடும் பெரும் அவசியத்தைச் சுட்டிக் காட்டுகின்றது.

இன்றைய தீர்க்கமான அரசியல் நிலைமையின் நடுமையமாக இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் 1947-48ம் ஆண்டுகளில் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் இந்திய துணைக்கண்டத்தில் தமது நலன்களைக் காக்கும் பொருட்டுத் திணித்த ''அரசியல் தீர்வுகளின்'' பொறிவுகள் விளங்குகின்றன. பிராந்தியத்தின் சகல நாடுகளிலும் தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும், ஏழை விவசாயிகளதும் போராட்டம் வெடித்துக் கிளம்புவதாலே இந்தத் தீர்வுகள் பொறிந்துள்ளன. ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் தேசிய முதலாளித்துவ ஏஜன்டுகளையும், அவர்களின் அரசாங்கங்களையும் அணிதிரட்டியபடி முதலாளித்துவ ஆட்சியை பாதுகாப்பதற்கான புதிய தாக்குதல்களை தயார் செய்கின்றார்கள். உக்கிரமடைந்துவரும் உலக முதலாளித்துவத்தின் நெருக்கடியினுள் அரைக் காலனித்துவ நாடுகளுள் பாய்ந்துவிழும் புதிய நலன்களோடு இந்த தாக்குதல்கள் சம்பந்தப்பட்டுள்ளன.

தமிழ் விடுதலைப் போராட்டத்தினால் ஐக்கிய முதலாளித் அரசாட்சி நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட வேளையில் அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களின் தலையீட்டுடன் இந்திய-இலங்கை உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. விடுதலை யுத்தத்தை சிதறடிக்கவும் இலங்கையில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக சிங்கள முதலாளித்துவ ஆட்சியை பலப்படுத்தவுமே இது செய்யப்பட்டது. யூ.என்.பி.யின் இராணுவ-பொலிஸ் சர்வாதிகார தயாரிப்புக்கள், இந்திய-இலங்கை ஒப்பந்தத்தினுலும் இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்புடனும் ஆரம்பமான தாக்குதலின் ஒரு பாகமாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தின் நாடுகளில் தொழிலாள வர்க்கத்தை இன்று ஒருவருக்கு எதிராக மற்றவரை நிறுத்துவதன்மூலம் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் தேசிய ஏஜன்டுகளும் நடாத்திவரும் பிற்போக்குச் சதியை, பிராந்தியம் பூராவும் உள்ள தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்தும் மூலோபாயம், வேலைத் திட்டத்தின் அடிப்படையிலேயே தோற்கடிக்க முடியும். அதாவது, உலக சோஷலிசப் புரட்சியின் மூலோபாயத்தின் அடிப்படையிலான அகில இந்திய சோசலிச குடியரசு முன்நோக்கின் அடிப்படையிலாகும்.

இம் மூலோபாயத்தின் ஒரு பாகமாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கை, தமிழ் ஈழம் சோசலிச குடியரசு முன்நோக்கினை முன் வைக்கின்றது.

இந்திய-இலங்கை முதலாளி வர்க்கத்தின் சதிக்கும் மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்புரட்சியாளர்களின் இயக்கத்துக்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தை அனைத்துலக ரீதியில் ஐக்கியப்படுத்தவும் தமிழ் தேசிய இனத்தினை தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் அணி திரட்டவும், அவ்வாறே கிராமப்புற சிங்கள விவசாயிகளின் தேசியவாத எழுச்சியானது சிங்கள இனவாதத்தின் மூலம் முதலாளித்துவத்தின் எதிர்ப்புரட்சிஆயுதமாகா வண்ணம் தடுக்கும் போராட்டமானது இந்திய-இலங்கை உடன்படிக்கையை நீக்கவும், இந்திய படைகளை வட-கீழ் மாகாணங்களில் இருந்து வெளியேற்றவும், தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமைக்காகவும் செய்யும் போராட்டத்துடன் இணைந்துள்ளது.

கிராமப்புற ஏழைகளின் காணி உரிமையை உறுதி செய்யவும், கிராமிய கடன் பழுவை ஒழிக்கவும், விவசாயிகளின் மீதான முதலாளித்துவ பிடியை உடைக்கவும் தொழிலாள வர்க்கம் போராடுவதன் மூலம் முதலாளி வர்க்கத்தினதும், குட்டி முதலாளித்துவ மக்கள் விடுதலை முன்னணியினது அத்திவாரத்தை உடைத்து எறியவும் விவசாயப் பிரச்சினையை தீர்க்கவும் தலையிடுவது அவசியம்.

உலக நெருக்கடி உக்கிரம் கண்டுள்ள வேளையில் ஏகாதிபத்திய மூலதனம் ஊடுருவுவதற்கான நிலைமைகளை உருவாக்கும் பொருட்டே இராணுவ-பொலிஸ் சர்வாதிகாரத்துக்கு தொழிலாள வர்க்கத்தையும் ஏழைகளையும் அடிமைப்படுத்த முதலாளித்துவ அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது, தனியார் மயமாக்கம், தொழில், வாழ்க்கைத் தரம் ஒழிப்பு, வேலையின்மை, இலவச கல்விச் சேவைகள் ஒழிப்பு, அடிப்படை ஜனநாயக உரிமைகள் தகர்ப்பு ஆகிய தாக்குதல்களுக்கு தொழிலாள வர்க்கம் முகம் கொடுத்துள்ளது. இவற்றுக்கு முகம் கொடுக்க ஏகாதிபத்திய, தேசிய முதலாளித்துவ சொத்துக்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கி, வெளிநாட்டு வர்த்தகத்தில் அரசின் ஏகபோகத்தை நிலைநிறுத்தி, ஏகாதிபத்திய கடன்களை திருப்பிச் செலுத்துவதை பகிஷ்கரித்து ஏகாதிபத்திய பிடியை உடைத்தெறிந்து சோசலிச சொத்துமுறையை அமைக்கும் வேலைத் திட்டத்தை அமுல் செய்யவேண்டும்.

தொழிலாள வர்க்கத்தின் மிக அடிப்படையாள ஜனநாயக உரிமைகளை காக்கும் பொருட்டு ஐக்கிய முன்னணி நடவடிக்கைகளை முன்வைக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அத்தகைய தற்காப்பு வேலைத் திட்டங்களால் மட்டும் உருவாகியுள்ள தீர்க்கமான நிலைமைக்கு முகம் கொடுத்துவிட முடியாது என்பதால் மேலே குறிப்பிட்ட தொழிலாள வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியத்தினை உறுதி செய்து ஜனநாயக உரிமைகளைக் காக்கின்றதும், சோசலிச சொத்துமுறையை அமைக்கின்றதுமான வேலைத்திட்டத்துக்குப் போராடுதல் அவசியம் எனக் குறிப்பிடுகின்றது.

தமிழ் தேசிய இனத்தின் தேசிய சுயநிர்ணய உரிமையை உறுதிச் செய்வதும், கிராமிய ஏழை விவசாயிகளின் பிரச்

★ 8ம் பக்கம் பார்க்க


## புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் :————————————————

முகவரி :————————————————

கழகத்தைப் பற்றி எனக்கு மேலும் விபரங்கள் வேண்டும் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

**புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்**

இல. 90, 1 = வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10.

# இனவாத வெறியர்களால் ட்ரொட்ஸ்கிஸ்ட் . . .

[ முன் பக்கத் தொடர்ச்சி ]

னுள் நிறைவேற்றப்பட்ட நாளில் இருந்து தமிழ் தேசிய இனப் பிரச்சினையின் தீர்வுக்கு தொழிலாள வர்க்கத்தின் சுயாதீனமான தலையீட்டையும், தலைமையையும் வலியுறுத்தி பிரச்சாரம் செய்தவர்களுள் அவர் முன் நின்றார்.

சங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட சுயநிர்ணய உரிமை போராட்ட பிரேரணைக்கு எதிராக எச். என். பெர்னாண்டோ தலைமையிலான மத்தியவாத தலைமை பிற்போக்கு சமசமாஜ கம்யூனிச - நவ சமசமாஜ -இ. தொ.கா. தலைவர்களுடன் இணைந்து இந்திய- இலங்கை உடன்படிக்கையை அங்கீகரித்தவேளையில் அப் பிற்போக்கு உடன்படிக்கையை இரத்துச் செய்வும் இந்திய ஆக்கிரமிப்பு படைகள் வடக்கு-கிழக்கிலிருந்து வெளியேற்றவும், குட்டி முதலாளித்துவ தமிழ் தேசியவாத தலைமைகளின் ஈடாட்டங்களுக்கு எதிராக தமிழ் மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்துக்கு தொழிலாள வர்க்க புரட்சித் தலைமையை வழங்க வேண்டியதன் அவசியத்தை தோழர். பிட்டவேல நன்கு அறிந்து கொண்டிருந்தார்,

மக்கள் விடுதலை முன்னணியின் இனவாத கொலைகாரர்கள் துப்பாக்கியை அவரின் தொண்டைக்கு குறிபார்த்த சமயத்திலும் அவர் பு. க. க. வின் இவ்வடிப்படைக் கொள்கைகளைக் கொண்ட 'கம்கறு மாவத' 'தொழிலாளர் பாதை' பத்திரிகைகளை தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே விற்பனை செய்திருந்தார். இந்திய-இலங்கை உடன்படிக்கை சம்பந்தமாக கிராமியப்புற சிங்கள ஏழை விவசாயிகளிடத்தில் நிலவிவரும் நியாயமான எதிர்ப்பினை நயவஞ்சகமாக சூறையாடி தனது பிற்போக்கு இனவாத தேவைகளுக்கு கனமாக்கும் மக்கள் விடுதலை முன்னணியினரின் செயல்பாடுகள் அனைத்துலக வாதத்தின் அடிப்படையில் ஏழை விவசாயிகளுக்கு புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தினை வழங்கும் தோழர். பிட்டவெல விடம்பெரும் சவாலுக்கு முகம் கொடுத்தது. இது மரண ஆபத்துக்கு மத்தியிலும் அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட ஆயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர், விவசாயிகள் மூலம் நிருபணமாகியது.

> புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பேராதனை கிளையின் அங்கத்தவரும், பேராதனை பல்கலை கழக ஐக்கிய (Minor) தொழிலாளர் சஙாத்தின் கூட்டு அங்கத்தவரும், பேராதனை இயந்திரங்கள் வலவின் தொழிற்சாலையில் தொழிலாளருமான தோழர் பீ. குனபாலவை கடந்த 23ம் திகதி இரவு மக்கள் விடுதலை முன்னணியின் பாசிச கொலையாளிகள் சுட்டுக் கொலை செய்துள்ளனர். அவரின் மரணச் சடங்கு 25ம் திகதி பேராதனையில் நடைபெற்றது. தோழர் குனபால சம்பந்தமான விபரம் எதிர் வரும் பத்திரிகையில் எதிர் வரும் பத்திரிகையில் இடம் பெறும்,

1974ம் ஆண்டில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் அங்கத்தவராகச் சேர்ந்த தோழர், பிட்டவெல, யூ. என். பி. அரசாங்கத்தின் வேட்டையினால் 1978ல் ஆசிரிய சேவையில் இருந்து இடை நிறுத்தப்பட்டார். இச் செய்தி கேட்ட சுமார் 700 கிராமத்தவர்கள் அவர் கல்வி கற்பித்து வந்த பாடசாலையை சுற்றி வளைத்து அவரை உடனடியாக சேவையில் அமர்த்தும்படி கோரினர். பல வாரங்களாக தொடர்ந்து இடம்பெற்ற மக்கள் அணிதிரலின் தாக்கத்தினால் ஆட்சியாளர்கள் இடை நிறுத்த உத்தரவை இரத்துச் செய்யும்படி நெருக்கப்பட்டனர்.

1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டதால் மீண்டும் தொழிலை இழந்த போதும் தோழர், பிட்டவெல தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர இயலளவு சம்பந்தமான அவரின் திடகாத்திரம் குன்றிவிடவில்லை.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை ஒரு பாகமாகக் கொண்ட நன்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் 1985 பிளவின் பின்னர் ஹீலி-பண்டா-சுலோற்றரின்ஒடுகாலிகளுக்கு எதிராக போராட்டத்தின் படிப்பினைகளை இலங்கையினுள் முன்னெடுத்துச் செல்ல அவர் காட்டிய உத்வேகம் சகல போராளிகளுக்கும் ஒரு சான்று.

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'தொழிலாளர் பாதை' யும் தோழர். பிட்டவெலவின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் தனது ஆழந்த வருத்தத்தை தெரிவித்துக் கொள்வதோடு அவர் தோள்கொடுத்த புரட்சிகரப் பணியை முன்னெடுத்துச் செல்ல உறுதி பூணுகின்றது.

(பு.க க. மத்திய குழு அறிக்கை அடுத்த இதலில் வெளிவரும்)

# ஐக்கிய முன்னணி நடைமுறைக்கான அழைப்பு!

... Branch Library

— 7ம் பக்கத் தொடர்ச்சி —

சினைகள் தொடர்பாகவும் சோசலிச வேலைத் திட்டத்தினை அமுல் செய்ய தொழிலாள வர்க்கத்தினால் முடிவது, தமிழ் தேசிய இனத்தையும் ஏழைகளையும் தமது தலைமையின் கீழ் கொணர்ந்து வர்க்க எதிரிக்கு எதிரான போராட்டத்தினை உக்கிரமாக்க கிளர்ந்து எழுந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை அமைப்பதன் மூலம் மட்டுமே.

இந்த மாற்று புரட்சிகர வேலைத்திட்டத்துக்குப் போராட தொழிலாள வர்க்கம் முன் செல்வதற்கு அது முதலாளி வர்க்கத்துடன் கொண்டுள்ள சகல பிணைப்புக்களையும் துண்டித்துக் கொள்ள வேண்டும். இன்றைய பேராபத்தான நிலைமைக்குத் தொழிலாள வர்க்கம் முகம் கொடுத்தமைக்கு சமசமாஜ-கம்யூனிச- இ.தொ.கா. - நவ சமசமாஜ தலைமைகள் இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி முதலாளித்துவ சார்பான அரசியலை முன்வைத்ததே காரணம். சமசமாஜ கம்யூனிச-நவ சமசமாஜ தலைவர்கள் இன்று தொடர்ந்தும் இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்குவதோடு முதலாளித்துவ சிறீலங்கா மக்கள் கட்சியுடன் இணைந்து 'முதலாளித்துவ ஜனநாயக ஆட்சி முறையை நோக்கி பின்னடிக்க கனவு காண்பதன் மூலம் தொழிலாள வர்க்கத்தை முதலாளி வர்க்கத்துடன் பிணைத்து ஸ்தம்பிக்க வைக்கச் செயற்பட்டு வருகின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைமை யூ, என்,பி. அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி திட்டத்தின் அப்பட்டமான சகாவாக தொழிற்படும் அதேசமயம் ஜ,தொ,கா. தலைமை முதலாளித்துவ சி.ல.சு. கட்சியுடன் மீண்டும் கூட்டுச் சேர்ந்து தொழிலாளர்களை பலி கொடுக்கத் தயாராகி வருகின்றது.

சமசமாஜ, கம்யூனிச, நவ சமசமாஜ இ.தொ.கா., ஜ' தொ.கா. தலைமைகள் முதலாளித்துவ கட்சிகளுடனும், அரசாங்கத்துடனும் கொண்டுள்ள தொடர்புகளைத் துண்டிக்கும்படியும் மேலே குறிப்பிட்ட வேலைத்திட்டத்துக்காகப் போராடும்படியும் கோருவதன் மூலம் தொழிலாள வர்க்கத்தை சுயாதீனமாக அணிதிரட்ட முன்னொரு போதும் இல்லாத அவசியம் இன்று ஏற்பட்டுள்ளது.

இந்த அரசியல் போராட்டத்தை உக்கிரமாக்கும்படியும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை மாற்று புரட்சிக் கட்சியாகக் கட்டி எழுப்ப இணையும் படியும் அனைத்து தொழிலாளர்களையும் இத் தீர்க்கமான தருணத்தில் வேண்டிக் கொள்கின்றோம்.

நடுப்பக்கங்களில் திகதியை டிசம்பர் 30 என திருத்தி வாசிக்கவும். — ஆசிரியர்

# சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்!

கொழும்பு — 10, 1 - வது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் பஹரகம நாகஹவத்தை வீதி 51 ம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.